Nestlé Good food, Good life

# பத்திரிகை வெளியீடு

கொழும்பு, 2021 நவம்பர் 07

**_Nestomalt_ Cycling Challenge 2021 போட்டியானது நாட்டில் விளையாட்டு நிகழ்வுகளை ஆக்கபூர்வமான வழியில் மீண்டும் ஆரம்பிப்பதற்கு வித்திட்டுள்ளது**

*Nestomalt* Cycling Challenge 2021 போட்டியானது 2021 நவம்பர் 07 ஆம் திகதியன்று கொழும்பிலுள்ள விகாரமகாதேவி பூங்காவில் வெற்றிகரமாக இடம்பெற்றுள்ளதுடன், நாடெங்கிலுமிருந்து 200 இற்கும் மேற்பட்ட முறையாக பயிற்சி பெற்ற சைக்கிளோட்ட வீரர்கள் பங்குபற்றியுள்ளனர். இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சின் வழிகாட்டலின் கீழ் இலங்கை சைக்கிளோட்ட வீரர்கள் சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வுக்கு இலங்கை மக்களுக்கு ஆக்கபூர்வமான வழியிலான மற்றும் வலுவூட்டும் வளர்ச்சியை வழங்கும் தனது குறிக்கோளின் ஒரு அங்கமாக, நெஸ்டமோல்ற்று அனுசரணையை வழங்கியுள்ளது.

"தொற்றுநோய் பரவ ஆரம்பித்த பின்னர், விளையாட்டு வீரர்கள் தமக்கிடையில் போட்டியிட்டு, தமது திறமைகளை மேம்படுத்திக் கொள்வதற்கான களங்கள் இன்றிய நிலைமையோ அல்லது மிகவும் சிறு அளவிலான வாய்ப்புக்கள் கொண்ட நிலைமையோ மாத்திரமே காணப்படுகின்றன. உடற்பயிற்சிகளுக்கு எப்போதும் ஆதரவளித்து வருகின்ற ஒரு வர்த்தகநாமம் என்ற வகையில், திறமைமிக்க எமது சைக்கிளோட்ட வீரர்களின் குறிக்கோள்களுக்கு வலுவூட்டி, தாம் நேசிக்கும் விளையாட்டில் திறமைகளை மேலும் மேம்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பளிப்பதற்காக இலங்கை சைக்கிளோட்ட வீரர்கள் சம்மேளனத்துடன் கைகோர்த்துள்ளமையையிட்டு நாம் மிகவும் பெருமைப்படுகின்றோம்," என்று நெஸ்லே நிறுவனத்தின் பாலை மூலமாகக் கொண்ட தயாரிப்புக்களுக்கான துணைத் தலைமை அதிகாரியான ருவான் வெலிக்கல அவர்கள் குறிப்பிட்டார்.

போட்டியாளர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக சுகாதார அமைச்சின் கண்டிப்பான சுகாதார விதிமுறைகளின் கீழ் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், தொற்றுநோய் காரணமாக நாட்டில் தடைப்பட்டிருந்த விளையாட்டு நிகழ்வுகளை மீள ஆரம்பிப்பதற்கும் உதவியுள்ளது. தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் போட்டியிடும் அபிலாஷையைக் கொண்டுள்ள முறையாக பயிற்சி பெற்ற சைக்கிளோட்ட வீரர்கள் தமது திறமை, மன உறுதி மற்றும் போட்டி மனப்பான்மை ஆகியவற்றை காண்பிப்பதற்கு ஒரு மகத்தான களமாக இது அமைந்துள்ளது.

ஏழு பிரிவுகளாக இப்போட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், பங்குபற்றியவர்கள் கடுமையாக போட்டியிட்டதையும் காணக்கூடியதாக இருந்தது.

போட்டி முடிவுகள்:

ஆண்களுக்கான சாதாரண பகிரங்க பிரிவு (40கிமீ) - (1) டில்ஷான் விஜித குமார (2) ரொஷான் மதுஷங்க (3) எச்.கே.என்.எல். வன்ஷப்பிரிய

ஆண்களுக்கான கனிஷ்ட பிரிவு (20கிமீ) (1) எல்.யு. அவிஷ்க ஜெயவிக்ரம (2) எஸ்.பி. தரங்க பெர்னாண்டோ (3) எல். டெஷான் கவிந்த

பெண்களுக்கான உயர் மட்ட பிரிவு (20கிமீ) (1) சுதரிகா பிரியதர்ஷனி (2) மதுமாலி பெர்னாண்டோ (3) ஆன் ஷெனாலி

ஆண்களுக்கான 23 வயதிற்குட்பட்டோர் பிரிவு (50 கிமீ) (1) ஷெஹால் சமோத் டி சில்வா (2) சுபுன் பியுமால் (3) தினேஷ் சமீர

ஆண்களுக்கான உயர் மட்ட பிரிவு (50கிமீ) - (1) நிரான் பசிந்து (2) அவிஷ்க மடோன்ஸா (3) நிதுஷ் நிராந்த

ஆண்களுக்கான 40 வயதிற்கு மேற்பட்டோர் பிரிவு (20கிமீ) - (1) பிரசன்ன மடோன்ஸா (2) சுரேஷ் துலங்க (3) டபிள்யூ.டி. ரோஹித

ஆண்களுக்கான 50 வயதிற்கு மேற்பட்டோர் பிரிவு (20கிமீ) - (1) மொஹமட் முனாஃப் (2) சுசந்த நந்தலால் (3) எம்.ஏ. ரஞ்சித் ஜெயலால்

நெஸ்லே நிறுவனம் 115 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை மக்களின் வாழ்வின் உள்ளங்கமாகத் திகழ்ந்து வந்துள்ளது. நிறுவனத்தின் பிரதான வர்த்தகநாமம் என்ற ரீதியில், நெஸ்டமோல்ற்று 50 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை குடும்பங்கள் மத்தியில் நம்பிக்கையை

வென்றெடுத்துள்ளதுடன், அவர்களால் அருந்தி மகிழப்பட்டு வந்துள்ளது. பிரத்தியேகமாக இலங்கையில் உற்பத்தி செய்யப்படுவதுடன், நாட்டிலுள்ள தனித்துவமான மோல்ற்று அடங்கிய பான வகையாக இது காணப்படுவதுடன், உடலுக்கும், உள்ளத்துக்கும் சக்தியளிப்பதற்கு தேவையான அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களின் செழுமையுடன், மோல்ற்று செய்யப்பட்ட பார்லி மற்றும் பால் ஆகியவற்றின் நலச்செழுமையை வழங்குகிறது.

---

**தொடர்புகளுக்கு:**


| | | | |
|---|---|---|---|
| நிறுவன பொது விவகாரங்கள் | தமித குலதுங்க | +94777915949 | Damitha.Kulatunga@lk.nestle.com |